**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 20.03.2025

**அசல் வழக்கு எண்.180 / 2014**

**வா.சா.** 1 **முருகேசன் - , த/பெ. சண்முகம்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை**

**2011** இல் உங்களுக்கு மனை ஒதுக்கீடு செய்தார்கள் என்றால் சரிதான். அதற்கு முன்பாக சாந்தியின் கணவருக்கு வீடு கட்டி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எப்பொழுது வீடு கட்டப்பட்டது என்றால் **1989** லேயே கட்டிக் கொடுக்கப்பட்டது. **1989** முதல் **2011** வரை சாந்தியின் வீட்டுக்காரர் அங்கு வசித்து வந்தார் என்றால் சரியில்லை. உங்களுக்கு வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டது **1989** ஆகும். மோகன் என்னும் எழுத்தர் தனது தவறான செய்கையால் உங்களுக்கு ஒதுக்கீடு செய்யவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான் அவர் மீது குறைந்த பட்சம் புகார் ஏதேனும் கொடுத்தீர்களா என்றால் வழக்கறிஞர் வாயிலாக அறிவிப்பு கொடுத்தேன் . உங்கள் கிரைய ஆவணம் **1989** உங்களுக்கு வீடு ஒதுக்கப்பட்டது என்பதை எழுதவில்லை என்றால் அது அவர்கள் செய்த தவறு. **1989** உங்களுக்கு வீடு ஒதுக்கப்பட்டது அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னிடம் உள்ளது. நீங்கள் மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்தது உங்களுக்கு கிரைய ஆவணம் திருப்பி தரவில்லை என்பதற்காகத்தான் என்றால் சரிதான். **2008** ஆம் ஆண்டு தனி அதிகாரிக்கு மனு கொடுத்ததாக சொல்கிறீர்கள் அந்த நகல்கள் உள்ளதா என்றால் இருக்கிறது. **1989** பணம் கட்டியதற்கு ரசீது உள்ளதா என்றால் உள்ளது. ஆனால் கிரைய பத்திரத்தில் ஒரே நாளில் பணம் கட்டியது போல் உள்ளது என்றால் இரண்டு மூன்று தவணையாக கட்டினேன் பதிவு செய்வதற்கு முன்பாக அந்த இடத்தை சென்று பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். அந்த இடத்தில் சீனிவாசன் குடும்பம் தான் இருந்தது என்றால் இல்லை பூட்டி வைத்திருந்தார்கள். ஆனால் அங்கு மக்கள் புழக்கம் இருந்தது என்றால் சரி இல்லை அங்கு மின்சார வசதி இல்லை ஆகவே அங்கு யாரும் இல்லை.ஆனால் நீங்கள் கேபிள் டிவி நடத்துவதாக வழக்கறிஞர் வாயிலாக நோட்டீஸ் கொடுத்தீர்கள் என்றால் சரிதான். **1993**

சீனிவாசன் பெயரில் வரி ரசீது உள்ளது என்றால் தவறு. **2011** க்கு முன்பாக வரி ரசீது யார் பெயரில் இருந்தது என்றால் என் பெயர் இருந்தது. நீங்கள் தாக்கல் செய்த பட்டா வரதராஜ சுவாமி பட்டுத்தறி நெசவாளர் சங்கத்தின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். கடந்த **2012** ஆம் ஆண்டு சாந்தி உங்களுக்கு நோட்டீஸ் கொடுத்தார் என்றால் அதில் தான் இருப்பதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். இரண்டாவது பிரதிவாதி மூர்த்தி என்பவர் அங்கு குடியிருக்கிறார் என்றால் சரிதான். ஒன்று முதல் நான்கு வரையிலான பிரதிவாதிகளுக்கு இடையே ஏதாவது குத்தகை ஒப்பந்தம் இருந்ததா என்றால் கிடையாது. உங்களுக்கு கிரயம் கொடுப்பதற்கு முன்பாகவே சீனிவாசன் முழு கிரைய தொகையும் கொடுத்து விட்டார் என்றால் சரியில்லை. முதல் பிரதிவாதியின் கணவர் சீனிவாசன் வரதராஜ சுவாமி பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூபாய் **45,000** கொடுத்து ரசீது பெற்றுள்ளார் என்றால் சரியில்லை. கிரைய ஒப்பந்தம் முதல் பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றால் சரியில்லை. கடந்த **2008** இல் இருந்து **2014** ஆம் ஆண்டு வரை நீங்கள் சுவாதீனம் கேட்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நோட்டீஸ் கொடுத்தேன். நீங்கள் **2014** ஆம் ஆண்டு தான் நோட்டீஸ் கொடுத்தீர்கள் ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியில்லை. அதேபோல் சொத்து வரி ரசீதுகள் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பெறப்பட்டது என்றால் சரிதான். கடந்த **9 5 2008** ஆம் ஆண்டு வரதராஜ சுவாமி பட்டு கூட்டுறவு நிறுவனத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நீங்கள் எதிர்த்து எந்த நீதிமன்ற நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியில்லை. வரதராஜ ஸ்வாமி பட்டு கூட்டுறவு சங்கம் முதல் பிரதிவாதிக்கு செய்த தீர்மானத்தை செய்து மறு தீர்மானம் எதுவும் இயற்றவில்லை என்றால் இயற்றவில்லை. ஆகவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my dictation and to my hearing

read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T. Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.